**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**
**C.C.No.343/2018**
**Prosecution Witness : 2**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : ஜெயலில்லி | **Caste** | : | |
| **Father's Name** | : அருள்சாமி | **Calling** | : | சார்பதிவாளர்(ஓய்வு) |
| **Village** | : | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **67** |
| | | **Dated** | : | **09.07.2025** |

**09.07.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 3 **திரு.** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.2** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2ம் எதிரி ஆஜர். 1ம்எதிரி ஆஜர் இல்லை. 355 BNSS Petition filed and allowed.**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு பத்திர பதிவு துறையில் சார்பதிவாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது திண்டுக்கல்லில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். கடந்த 05.03.2015 ந் தேதி பழனி இணைசார்பதிவாளர் 1 ஆக வேலை செய்து வந்த போது திண்டுக்கல் மாவட்ட குற்றப்பிரிவு சார்பு ஆய்வாளர் குற்றப்பிரிவு எண். 164/2014 வழக்கு சம்மந்தமாக பழனி கிராம சர்வே எண். 618,619,620/2 க்குரிய 01.07.1974 முதல் 31.12.1986 வரை மற்றும் 1987 முதல் 31.12.2014 வரை வில்லங்க சான்று வேண்டும் என்று கேட்டு வந்த கடிதத்தின் அடிப்படையில் ஆவணங்களை பார்வையிட்டு அதற்குரிய ஆவணங்களை மாவட்ட குற்றப்பிரிவிற்கு அனுப்பி வைத்தேன். பழனி கிராமம் சர்வே எண். **(618,619,620/2 க்குரிய 1974 ம் ஆண்டு ஜூலை 1முதல் 1986 ம்ஆண்டு டிசம்பர் 31 வரையிலான Manual வில்லங்க சான்று(எண்ணிக்கை–3) அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (பழனி சர்வே எண். 618,619,620/2 01.01.1987 முதல் 31.12.2014 வரையிலான கணினி வில்லங்க சான்று (எண்ணிக்கை–15) அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)(31.07.2013 ந் தேதியிட்ட ஆவண**

**எண். 1863,2013 ம் ஆண்டு பக்க எண். 1, மொத்த பக்கங்கள் 19 General பவர் பத்திரம் அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)(02.01.2014 ஆவண எண். 5 ஆண்டு 2014 பக்க எண். 1 ,மொத்த பக்கங்கள் 25 ஐ கொண்ட கிரைய ஆவணம் அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சண்முக ராஜ் தாக்கல் செய்த OS No.11/2023 என்ற வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் புகார்தாரர் பெற்ற கிரைய ஆவணம் நான் தாக்கல் அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள வில்லங்கசான்றில் குறிப்பிட்டுள்ளதா என்றால் 2023ல் நான் பணி ஓய்வு பெற்று விட்டேன். அதனால் எனக்கு தெரியாது. எனக்கு மாவட்ட குற்றப்பிரிவில் இருந்து ஆவணங்களை தாக்கல் செய்ய எந்த விதமான அழைப்பாணைகளும் கொடுக்கப்படவில்லை என்றால் அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அழைப்பாணை கடிதத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.பிரேம்குமார் என்பவர் நாசருக்கு எழுதி கொடுத்த கிரைய ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் போது சட்டவிரோதமாக நான் 15.06.2015 ந்தேதியில் சின்னச்சாமி என்பவரின் நிர்பந்தத்தின் பேரில் நான் சட்டவிரோதமாக பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பதிவு துறை சட்டத்தின் படி 2012 முதல் ஒரு ஆவணத்தை பதிவு செய்வதற்கு முன்பு அலுவலகத்தில் முதல் எந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அதன் தொடர்ச்சியாக தான் ஆவணம் பதிவு செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான்.வில்லங்க சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள Entries சம்மந்தமாக நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

2.நான் ஆவணங்களை பதிவு செய்யும் போது வில்லங்க சான்றிதழில் குறிப்பிட்டுள்ள ஆவண நகல்களை எடுத்து நான் பரிசீலனை செய்யவில்லை என்றால் சரிதான்.நான் சொல்வது போல் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.07.09 19:37:23 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.343/2018**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சண்முகராஜ் | **Caste** | : |
| **Father's Name** | : சின்னச்சாமி | **Calling** | : சுயதொழில் |
| **Village** | : உடுமலைப்பேட்டை | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 38 |
| | | **Dated** | : 09.07.2025 |

**09.07.2025**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**2ம் எதிரி ஆஜர். 1ம்எதிரி ஆஜர் இல்லை. 355 BNSS Petition filed and allowed.**
**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 22.07.2008ந் தேதியில் கிரையம் செய்த 1/9 ல் ஒரு பாகத்தை கிரையம் பெறுவதற்கு முன்பாகவே எனக்கு கிரையம் எழுதி கொடுத்த சரஸ்வதியும் மற்றும் அவருடன் உடன் பிறந்த சகோதர, சகோதரிகளுக்கு 07.01.2005 ந் தேதியன்று மாரிமுத்து மற்றும் கிருஷ்ணவேணிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். சரஸ்வதி அம்மாள் இந்த கிரையத்தின் முன்பு அவர் கொடுத்த பவரை ரத்து செய்து விட்டார். **(என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்சொன்ன ஆவணமாகும். அது எதசாஆ.1 ஆக குறியீடு(ஜெராக்ஸ்) செய்யப்படுகிறது).**நான் மேற்சொன்னது போல் சரஸ்வதி அம்மாள் ரத்து செய்து விட்டார் என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் அந்த ஆவணத்தில் நான் சாட்சியாக இல்லையென்றாலும் சரிதான். எனக்கு அதன் பின்பு தான் தெரியும். நான் சொல்வது போல் அவ்வாறு சரஸ்வதி அம்மாள் ரத்து செய்து

விட்டார் என்பது உண்மைக்கு புறம்பாக இருக்கிறது என்றால் சரியல்ல. பொன்னையா என்பவருக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 63 செண்ட் இப்போது வரை பிரிக்கப்படாமல் உள்ளது என்றால் சரியல்ல. 2008ல் எனக்கு பாகம் பிரித்து கொடுக்கப்பட்டது. பொன்னையாவின் 9 வாரிசுகளுக்கும் சம பங்கு உண்டு என்றால் சரியல்ல. 9 வாரிசுகளுக்கும் எவ்வளவு பங்கு என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த அடிப்படையில் நான் பதிவு செய்த பத்திரத்தில் 21 செண்ட் என்று விஸ்திரனம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு கிரையம் செய்து கொடுத்த சரஸ்வதி அம்மாள் அவர்களுடைய பங்கு 21 செண்ட் என்று கிரையம் செய்து கொடுத்தார் .

2. எனக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தில் 1/9 பாகம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதன் தொடர்ச்சியாக எனக்கு உண்டான 21 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1/9 பாகம் என்றால் 18 செண்ட் தான் வரும் என்றும் 21 செண்ட் எழுதி கொடுக்க முடியாது என்றால் சரியல்ல. 1/9 பாகம் உள்ள பிரியாத சொத்தில் நான்குமால் போட்டு எழுதியது போலியானது என்றால் சரியல்ல. நான் சரஸ்வதி அம்மாள் உடன் பிறந்தவர்களுக்கிடையே பிரிக்கப்பட்ட எந்த ஆவணத்தையும் பார்க்கவில்லை என்றால் அவர்கள் வாய்மொழியாகவே பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்று கிரைய பத்திரத்தில் உள்ளது. அவ்வாறு நான் எனது வசதிக்காக போலியாக தயார் செய்து குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

3.எனக்கு கிரையம் செய்து கொடுத்த சரஸ்வதி அம்மாளுக்கு தனிப்பட்டா கிடையாது என்றால் சரிதான். அது கூட்டாக அனுபவிக்கப்பட்ட சொத்து. நான் என்னுடன் சேர்ந்து வெங்கடேஷ் , தனபால் ஆகியோர் சரஸ்வதியிடம் வாங்கிய பங்கை எனக்கு எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்து சம்மந்தமாக பழனி உரிமையியல் நீதிமன்றத்தில் OS No.11/2023 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் என்னுடைய பங்கிற்கு விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கானது 26.07.2024ந் தேதியன்று மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்துள்ளேன். **(என்னிடம் காட்டப்படும் அசல் வழக்கு எண். 11/2023 ன்**

**பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்பின் கணினி நகல் எதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. நான் மேல்முறையீடு செய்துள்ளேன் என்பதற்கு மேல் முறையீட்டு வழக்கு எண்ணோ, வேறு ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை என்றால் தற்போது என்னிடம் கையில் இல்லை. நான் சொல்வது போல் மேல்படி வழக்கிற்கு மேல்முறையீட்டு காலம் முடிந்து 1 வருட காலம் ஆகிவிட்டதாலும் நான் தற்போது உண்மைக்கு புறம்பாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவும் சரஸ்வதியுடன் கூட பிறந்தவர்களும் 15.06.2015 ந் தேதியன்று கிரையம் ஒப்பந்தம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.**(என்னிடம் காட்டப்படும் ஆவணமானது எனது அப்பாவும் சரஸ்வதியுடன் கூட பிறந்தவர்களும் 15.06.2015 ந் தேதியன்று கிரையம் செய்து கொண்ட ஒப்பந்தம் ஆகும். அது எதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அதில் எழுதி கொடுப்பவர் என்ற இடத்தில் அகிலாண்டம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அசா.ஆ.1 ஆன புகாரில் உள்ள கையொப்பத்தில் அகிலாண்டேஸ்வரி என்று போடப்பட்டுள்ளது என்றாலும் அந்த அம்மாவின் கையொப்பம் அது அல்ல என்றால் சரியல்ல. அந்த அம்மாவின் முழுப்பெயர் அகிலாண்டேஸ்வரி.

4. நான் சொல்வது போல் அந்த அம்மாவின் பெயரை பயன்படுத்தி போலிசாரிடம் பொய்யாக புகார்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகளிடம் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் எந்தவொரு குற்றசெயலிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. அகிலாண்டம் என்பவரின் கையொப்பம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அவரின் கையொப்பம் எனக்கு தெரியும்.

5. நான் சொல்வது போல் எதிரிகளின் சொத்திற்குள் உள்ளே அத்து மீறி நுழைந்து கம்பி வேலியை சேதப்படுத்தியதற்காக என்மீது பழனி டவுன் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கையாக குற்ற எண். 1025/2021 என்று பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். **(என்னிடம் காட்டப்படும் என்மீது பழனி டவுன் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கையாக குற்ற எண். 1025/2021 ஆகும். அது எதசாஆ.4 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது)** ஆனால் அது நான் கிரையம் செய்த சொத்தில் அவர்கள் வேலி அமைத்து ஆக்கிரமிப்பு செய்த போது நான் புகார் கொடுத்தேன்.எதிரிகள் மீது நான் கொடுத்த புகார் 1026/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் சரஸ்வதி அம்மாளுக்கு எனக்கு கிரையம் செய்து தர அதிகாரம் இல்லையென்றால் சரியல்ல. மேற்படி குற்ற வழக்கிற்கு முன் ஜாமினாக திண்டுக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்ற 50 ஆயிரம் ரூபாய் சேதாரத்திற்காக கட்டியுள்ளேன் என்றால் சரிதான். **(என்னிடம் காட்டப்படும் மேற்படி குற்ற வழக்கிற்கு முன் ஜாமினாக திண்டுக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்ற 50 ஆயிரம் ரூபாய் சேதாரத்திற்காக கட்டி முன் ஜாமீன் பெற்றேன். அது எதசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6.அகிலாண்டம் என்பவர் ஷேக் என்ற முஸ்லீம் மதத்தை சேர்ந்தவரை திருமணம் செய்து மதம்மாறி அவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளது என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. அவ்வாறு திருமணம் செய்து கொண்டதால் அகிலாண்டம் என்பவர் எனக்கு சொத்து பங்கு வேண்டாம் என்று வாய்மொழியாக சொல்லி சென்றுள்ளார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.07.09 19:38:05 +0530

Judicial Magistrate No.II
Dindigul.